**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 200/2021**

**வா.சா.1 – செல்வி**

**03–02–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பாகம் பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சொத்து எனது தாத்தா கருப்பனுக்கு சொந்தமானது. கருப்பனுக்கு நாச்சிமுத்து, மாரிமுத்து (எ) ஞானபிரகாசம் மற்றும் சாமிநாதன் வாரிசுகள். வாதிகள் மாரிமுத்து (எ) ஞானபிரகாசத்தின் வாரிசுகள். அவருக்கு ஆண் வாரிசு இல்லை. நாச்சிமுத்துவின் வாரிசு 3ம் பிரதிவாதி. சாமிநாதனுக்கு குழந்தைகள் இல்லை, ராதா என்ற வளர்ப்பு மகள் உள்ளார். அவர் வளர்ப்பு மகள் அல்ல என்றும், சாமிநாதனின் மகள் என்றால் சரியல்ல. அவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை.

2. சாமிநாதனின் மனைவி பலநாள் உயிருடன் உள்ளார். அவரையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. நாச்சிமுத்துவின் மனைவி பாப்பாத்தி இறந்துவிட்டார். மாதம்மாள் எனது தாயார், அவர் இறந்துவிட்டார். மாரிமுத்துவும் சுப்பிரமணியும் சாமிநாதனுக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும், 4ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கோராததாலும் வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.03 17:52:36 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.